DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 218/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : அய்யம்மாள் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th July 2026.

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது அழகாபுரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரி வேல்ராஜை எனக்கு தெரியும். அவர் எனது தம்பி. அரசுதரப்பு பட்டியல் சாட்சி 1 மாணிக்கத்தை எனக்கு தெரியும். அவர் எனது கணவர். 2014ம் வருடம் ஒரு நாள் மாலை 6 மணிக்கு எனது அம்மாவின் வீட்டில் இருந்து மூங்கில் கம்பு வாங்கி வந்து எங்கள் வீட்டில் எரியாமல் இருந்த லைட்டை எனது கணவர் தட்டிவிட்டுக்கொண்டிருந்தபோது எனது தம்பியான எதிரி எங்கள் வீட்டிற்கு வந்து எனது கணவரிடமிருந்து மூங்கில் கம்பை பிடுங்கி எனது கணவரின் தலை மற்றும் உடல்பகுதிகளில் அடித்து காயம் ஏற்படுத்தினார். அதனால் எனது கணவருக்கு மண்டை உடைந்து ரத்தம் வந்தது. அதன்பிறகு எதிரி கம்பை பிடுங்கிகொண்டு அங்கிருந்து ஓடிவிட்டார். எனது கணவரை எதிரி அடிக்கும்போது புண்டமவனே என் வீட்டு கம்பை நீ எப்படி எடுக்கலாம் என்று கூறினார் . அதற்கு எனது கணவர்

லைட்டை சரிசெய்வதற்குதான் கம்பை எடுத்தேன் என்று சொல்லியபோது அப்படி எடுக்கக்கூடாது என்று சொல்லி தேவடியா மவனே, பலவட்ரை என்று அசிங்கமாக பேசினார். எதிரி எனது கணவரை பார்த்து எனக்கு என்ன சோழி இந்த ஊரில் இருக்கக்கூடாது, ஊரைவிட்டு ஓடிவிடு என்று கூறினார். பின்னர் எதிரி என்னை பார்த்து நீ இங்க இருக்கக்கூடாது உனக்கு என்ன சோழி என்று கூறினார். எனது கணவரை நாங்கள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு வந்த போலீசார் சம்பவம் தொடர்பாக எனது கணவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை என தெரிவித்தார்.**